1972 ஆகஸ்ட் 25]

சாப்பிட்டுக்கொண்டிருந்த மற்றொருவக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டன. இது குறித்து சம்பந்தப்பட்டவர்களை, மதுரை இரண்டாவது துணை மாஜிஸ்டிரேட் குற்றவாளிகளெனத் தீர்ப்பளித்து ஒவ்வொருவருக்கும் ரூ. 50 அபராதம் விதித்தார்.

Indian National Army

***253 Q.—Thiru P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Chief Minister be pleased to state—**

(a) whether any complaint has been received that there was impersonation in the grant of loan to the Ex-servicemen belonging to Indian National Army and Burma repatriates at Kandramanikkam, Tiruppattur taluk, Ramanathapuram district; and

(b) if so, the details thereof?

முன்னாள் தேசிய ராணுவ வீரர்கள்

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் கண்டரமாணிக்கத்தில் முன்னாள் தேசிய ராணுவ வீரர்கள் (I.N.A.) பர்மா அகதிகளுக்குக் கடன் மானியம் வழங்குவதில் ஆள் மாருட்டம் செய்ததின் காரணமாக புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதிய விண்ணப்பங்கள் பெறுவதற்கான கடைசி நாளை 15—9—71 வரை நீட்டித்ததால், இராமநாதபுரத்திலுள்ள திருப்பத்தூர் தாலூக்காவிலிருந்து ஏராளமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன என இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். மாவட்ட ஆட்சியாளர், சுமார் 213 விண்ணப்பங்களைப் பரிசிலித்த போது பழிபாவத்திற்கு அஞ்சாதவர்கள் போலி இந்திய தேசிய இராணுவ சான்றிதழ்களை ஆதரவாகக் காட்டி விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத்தைத் திட்டமிட்டுப் பெற்றிருப்பர் என சந்தேகித்துள்ளார். ஆகையினால் இது குறித்து புலனாய்வுக்காக மண்டல காவல் துறை அதிகாரி (குற்றப் புலனாய்வுப் பகுதி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வழக்கு ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வழக்கில் புலனாய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.